**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 5/2015**

| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|---|---|
| NAME | கஸ்துாரி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 23.03.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த வழக்கை அஜய் என்பவர் எனது சகோதரி கோகிலா மீது 2015ல் போட்டார் என்றால் 2015ல் தெரியாது கோகிலா இறந்த பிறகுதான் தெரியும். கோகிலா இறக்கும் வரை ஒப்பந்தம் போடப்பட்ட அதே வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். கோகிலா இந்த வழக்கில் ஆஜராகாமல் ஒருதலை பட்சமாக தீர்பபானது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் அஜய் ருபாய் 20000 வைப்பீடு செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

2. அந்த தீர்ப்பின் அடிப்படையில் வாதி நிறைவேற்று மனு தாக்கல் செய்து இந்த நீதிமன்றம் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரையப்பத்திரத்தின் பேரில் அஜய் சுவாதீனம் கேட்டு மனு போட்டது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அந்த மனு விசாரணையில் இருந்தபோது எனது சகோதரி கோகிலா இறப்பதற்கு முன்பு வழக்கை மீண்டும் விசாரிக்க மனு போட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த காலதாமத மனு அனுமதிக்கப்பட்டு ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய சொல்லிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது.

3. மேற்பட்ி விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் அதனால் தான் ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து மனுவில் என்னை தரப்பினராக சேர்க்க மனு போட்டேன் என்றால் சரியல்ல, கோகிலா இறந்தபிறகு அஜயிடம் வேலை பார்ப்பவர் வழக்குப் பற்றி தகவல் சொல்லி மனு போட்டேன். இந்த விவரத்தை அந்த மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை பார்க்கவேண்டும்.

4. இந்த வழக்கில் கோகிலா என்ன பதில் போட்டுள்ளார் என்று எனக்குத் தெரியாது. அவர் என்ன பதில் போட்டார் என தெரிமால் நாங்கள் இந்த வழக்கில் சேர்ந்த பிறகு பதில் போட்டோம் என்றால் சரிதான். கோகிலா பதில்

போட்டபிறகு நாங்கள் வேறு சங்கதிகள் சொல்லி பதில் போட முகாந்திரம் இல்லை என்றால் கூட்டாக சொத்துள்ளது அதனால் எங்களுக்கு அதிகாரமுள்ளது.

5. தாவா சொத்திற்கு எங்கள் 3 பெயரிலும் பட்டா உள்ளது என எங்களது வாதம் என்றால் சரிதான். இந்த சொத்தில் எனது சகோதரி கோகிலாவிற்கு 3ல் 1பங்கு உரிமையுள்ளது என்றால் சரிதான். அதே போல் எனக்கும் கண்ணம்மாளுக்கும் தலா 3ல் 1 பங்கு உரிமையுள்ளது என்றாலும் ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அப்படியென்றால் கண்ணம்மாள் அவரது 3ல் 1 பங்கு சொத்தை விற்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் பங்கு செட்டில் ஆன பிறகு விற்க ஆட்சேபனை இல்லை.

6. கோகிலா அவரது 3ல் 1 பங்கு சொத்தை விற்க உரிமை உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக பாகம் பிரிக்காமல் இருப்பதால் உரிமை இல்லை, பாகம் பிரித்தபின் விற்கலாம். நாங்கள் இதுவரை பாகம் பிரிக்க வழக்குப் போடவில்லை என்றால் சரிதான், அக்கா வீட்டில் இருக்கட்டும் என பாகம் கேட்கவில்லை. வா.சா.ஆ.1ல் உள்ள புகைப்படத்தில் உள்ளவர் என எனது அக்கா கோகிலா என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தை கோகிலா ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் அதை மறைத்து நான் பதில் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல, விற்க அவருக்கு உரிமையில்லை. பதிவு செய்த ஆவணத்தை எனது சகோதரி எழுதிக்கொடுத்த பிறகு அதை மறுத்து நான் வழக்காட முடியாது என்றால் சரியல்ல மறைத்து பதிவு செய்துள்ளார்கள். எனக்கு தெரியாமல் அஜய்க்கு கோகிலா சொத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என சொல்கிறேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக்கொடுத்தபோது என்ன நடந்தது என எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அந்த கோகிலா தாவா சொத்தில் 3ல் 1 பங்கை அஜய்க்கு விற்க 16.12.2013ல் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளார் என்றால் சரிதான், எங்களுக்கு தெரியாமல் பாகம் பிரிக்காமல் ஒப்பந்தம் போட்டது தவறு. அந்த ஒப்பந்தப்படி 60000த்தில் 40000த்தை கொடுத்து பாக்கி 20000க்கு 11 மாதம் காலக்கெடு கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. ஒப்பந்தப்படி கிரையம் எழுதிக்கொடுக்காததால் வாதி இந்த வழக்கைப் போட்டார் என்றால் ஒப்பந்தம் போட்டதும் வழக்குப் போட்டதும் எனக்குத் தெரியாது.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/– K.கார்த்திக் அசாத்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.